# Joint Press Release of the 12th India-European Union Counter Terrorism Dialogue

November 19, 2020

## 12 வது இந்தியா- ஐரோப்பிய யூனியன் பயங்கரவாத உரையாடலின் செய்தி வெளியீடு

நவம்பர் 19, 2020

12 வது இந்தியா- ஐரோப்பிய யூனியன் பயங்கரவாதத்தை எதிர்கொள்வது பற்றிய உரையாடல் 19 நவம்பர் 2020 அன்று மெய்நிகர் வாயிலாக நடைபெற்றது. இந்தியா- ஐரோப்பிய ஒன்றிய மூலோபாயக் கூட்டாட்சியின் இந்த முக்கியமான உறுப்பு குறித்து நெருக்கமான ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் தொடர உரையாடல் ஒரு வாய்ப்பாக இருந்தது. இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் பயங்கரவாததிற்கு எதிரான போராட்டத்தில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க தீர்மானித்தன.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு பயங்கரவாதப் பிரதிநிதிகளைப் பயன்படுத்துவது உள்ளிட்ட அனைத்து வடிவங்களிலும் வெளிபாடுகளிலும் பயங்கரவாதத்தை இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் கடுமையாக கண்டித்தன. ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளில் அண்மையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களை இந்தியா கண்டித்து, பாதிகப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளது. 26/11 மும்பை, பதான்கோட் மற்றும் புல்வாமா உள்ளிட்ட இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை கண்டனம் செய்த ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்திய மக்களுக்கும் இந்திய அரசாங்கத்திதிற்கும் தனது ஆதரவை மீண்டும் வலியுறுத்தியது. இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் பயங்கரவாதத்தை ஒரு விரிவான மற்றும் நீடித்த முறையில் எதிர்த்து போராடுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தின. அவர்கள் அதை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

உரையாடலில் பங்கேற்பாளர்கள் ஐ.நா அனுமதித்த பயங்கரவாத அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட அச்சுறுத்தல்களை மதிப்பாய்வு செய்ததோடு, அனைத்து பயங்கரவாத வலைப்பின்னல்களுக்கும் எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்தினர். மற்ற நாடுகளின் மீதான பயங்கரவாத தாக்குதல்களுக்கு தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள எந்த பிரதேசமும் பயன்படுத்தப்படுவதில்லை என்பதை உறுதிபடுத்த அனைத்து நாடுகளும் உடனடி, நீடித்த மற்றும் மீளமுடியாத நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசர தேவையையும் அவர்கள் கோடிட்டு காட்டினர்.

தீவிரமயமாக்கல் மற்றும் வன்முறை தீவிரவாதத்தை எதிர்கொள்வது, பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்து போராடுவது மற்றும் இணையத்தின் பயங்கரவாத பயன்பாட்டை கையாள்வது உள்ளிட்ட தற்போதைய பயங்கரவாத எதிர்ப்பு சவால்கள் குறித்து இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டன. இந்த சவால்களை கையாள்வதில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்புக்கொண்டனர். பங்கேற்பாளர்கள் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான ஒரு கருவியாக பொருளாதாரத் தடைகள் குறித்து அவர்கள் விவாதித்தனர், இதில் சில பயங்கரவாதக் குழுக்கள் மற்றும் தனி நபர்களின் பெயர்கள் அடங்கும். பயங்கரவாத எதிர்ப்புத் துறையில் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக இந்திய

ஏஜன்சிகளுக்கும் யூரோபோல் உள்ளிட்ட அவர்களின் ஐரோப்பிய சகாக்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஆழமாக்குவதற்கான வழிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர். இந்த சூழலில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் பயங்கரவாதத்தை தடுப்பதிலும், போரிடுவதிலும் இந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு ஆதரவளிப்பதற்காக யூரோப்போலுக்கும் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான ஒரு வேலை ஏற்பாடு குறித்த பேச்சுவார்த்தைகளை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐ. நா உயர்மட்ட பயங்கரவாத எதிர்ப்பு வாரம் 2021 மற்றும் வரவிருக்கும் 2021 உட்பட நிதி நடவடிக்கைப் பணிக்குழு , உலகளாவிய பயங்கரவாதக் கட்டுப்பாட்டு மன்றம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா) போன்ற பல தரப்பு அரங்குகளில் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு பற்றி விவாதிப்பதற்கான வாய்ப்பையும் இந்த உரையாடல் வழங்கியது. ஐ.நா உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு மூலோபாயத்தின் ஆய்வு.

பயங்கரவாத எதிர்ப்பு உரையாடலுக்கு இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் பயங்கரவாத எதிர்ப்பு இணைச் செயலாளர் திரு மஹாவீர் சிங்வி மற்றும் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் பாதுகாப்புக் கொள்கை இயக்குனர் செல்வி ஜோவானக் பால் ஃபோர்ட் ஆகியோர் தலைமை தாங்கினர்.

**நியூ டெல்லி**
**நவம்பர் 19, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.